AGLASEM.COM

Tamilnadu Board

Quarterly Exam Question Paper

CLASS 9



KSJ சுடரொளி தமிழ் உரை, நாமக்கல்.

மாணவர்களுக்கான ஒரு சிறந்த வழிகாட்டி

காலாண்டுத்தேர்வு 2022 - 2023

வகுப்பு : 9 **மாதிரித்தேர்வு - I** **நேரம் : 3.00 மணி**

பாடம் : தமிழ் **மதிப்பெண்கள் : 100**

பகுதி – I மதிப்பெண்கள் 15

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. 10x1=15

1. தமிழ் விடு தூது …….. என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ. தொடர் நிலைச் செய்யுள் ஆ. புதுக்கவிதை
   இ. சிற்றிலக்கியம் ஈ. தனிப்பாடல்
2. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தாமணி அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு ……..
   அ. வேற்றுமைத் தொகை ஆ. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
   இ. பண்புத்தொகை ஈ. வினைத்தொகை
3. மிசை என்பதன் எதிர்ச்சொல் என்ன?
   அ. கீழே ஆ. மேலே இ. இசை ஈ. வசை
4. மல்லை மூதூர் வயவேந்தே – கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ. மறுமை ஆ. பூவரசு மரம் இ. வளம் ஈ. பெரிய
5. பொருந்தாத இணை எது?
   அ. ஏறுகோள் - எருதுகட்டி ஆ. திருவாரூர் - கரிக்கையூர்
   இ. ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ. பட்டிமன்றம் - பட்டிமண்டபம்
6. தீரா இடும்பைத் தருவது எது?
   அ. அறியாமை, ஐயப்படுதல் ஆ. குணம், குற்றம்
   இ. பெருமை, சிறுமை ஈ. நாடாமை, பேணாமை
7. உலகப் தாய்மொழி நாள் ……..
   அ. அக்டோபர் - 2 ஆ. பிப்ரவரி - 2
   இ. நவம்பர் - 14 ஈ. பிப்ரவரி - 21
8. கீழ்க்கண்டவற்றுள் தென்திராவிட மொழி அல்லாதது எது?
   அ. கன்னடம் ஆ. தெலுங்கு
   இ. மலையாளம் ஈ. துளு
9. 'அவள் நெற்றியில் பொட்டு வைத்தாள்' – வினைச்சொல் எது? வினைவகையைக் கண்டறிக.
   அ. முதல் வினை, துணைவினை ஆ. இடைவினை, துணைவினை
   இ. துணைவினை, கூட்டுவினை ஈ. முதல்வினை, கூட்டுவினை
10. தமிழ்மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல் ……..
    அ. அகத்தியம் ஆ. நன்னூல்
    இ. தண்டியலங்காரம் ஈ. தொல்காப்பியம்
11. திணை, பால், இடம், காலம் காட்டும் விகுதிகளைப் பெற்ற வருவது ……..
    அ. முதல் வினை ஆ. துணை வினை
    இ. இரண்டும் ஈ. பெறாது

பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் - அவை
அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்
நிகரிலாக் காப்பியப் பூவனங்கள் - உன்
நெஞ்சம் நடத்தட்டும் ஊர்வலங்கள்

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
    அ. தமிழ்விடு தூது ஆ. தமிழோவியம்
    இ. மணிமேகலை ஈ. புறநானூறு
13. இப்பாடலின் ஆசிரியர் ……..

எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635

schools.aglasem.com

aglasem.com

அ. ஈரோடு தமிழன்பன் ஆ. சேக்கிழார்
இ. கவிஞர் தமிழ்ஒளி ஈ. வைரமுத்து

14. கீழ்க்கண்டவற்றுள் அடிமோனையைச் சுட்டுக.
அ. **அ**கமாய் **அ**வை ஆ. **அ**கமாய் **அ**மைந்ததை
இ. **அ**மைந்ததை **அ**வை ஈ. **அ**வை, **அ**கமாய்

15. புறம் பொருள் தருக.
அ. புகழ் ஆ. போர் இ. உள்ளே ஈ. மன்னன்

பகுதி – II (மதிப்பெண்கள் 18)

பிரிவு - 1

II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4x2=8
(21-வது வினாவிற்குக் கட்டாயமாக விமையளிக்க வேண்டும்)

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ. மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம்.
ஆ. பாண்டி மண்டலத்து நிலப்பகுதியில் ஏரியைக் கண்மாய் என்று அழைத்தனர்.
17. கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களை எழுதுக.
18. "கூவல்" என்று அழைக்கப்படுவது எது?
19. பழமணல் மாற்றுமின், புதுமணல் பரப்புமின் - இடம்சுட்டிப் பொருள் விளக்குக.
20. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?
21. வாழ்வில் உயர நினைப்பவர் புகழைக் கெடுக்கும் செயல்களைப் புறம் தள்ள வேண்டும் எனப் பொருள் தரும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5x2=10

22. பொருத்தமான வினையடைகளைத் தேர்வு செய்க.
(அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக)
அ. ஊர்தி ..... சென்றது.
ஆ. சங்க இலக்கியம் வாழ்க்கையை ..... காட்டுகிறது.
23. பழமொழிகளைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க.
அ. நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாய்வது போல.
ஆ. கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது.
24. ஒரு தொடரில் இருவினைகளை அமைத்து எழுதுக.
அ. குவிந்து – குவித்து
ஆ. சேர்ந்து – சேர்த்து
25. கலைச்சொற்கள் தருக.
அ. Embossed Sculpture ஆ. Inscription
26. அகராதியில் பொருள் காணுதல்.
அ. பௌரி ஆ. கம்புள்
27. வீணையோடு வந்தாள், கிளியே பேசு – தொடரின் வகையைச் சுட்டுக.
28. நெறிப்படுத்தினர் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

பகுதி – III (மதிப்பெண்கள் 18)

பிரிவு - I

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2x3=6

29. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?.
30. ஏறுதழுவுதல், திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?
31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

முதன்முதலாக மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டபோது உலகம் சுருங்கிவிட்டது என்று மகிழ்ந்தோம். கடிதம் போக்குவரத்து குறைந்தது. குறுஞ்செய்தியின் வருகைக்குப்பின் தந்தி

எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635

schools.aglasem.com
aglasem.com

விடைபெற்றுக் கொண்டது. சமூக வலைதளங்கள் மூலம் காணொலி இணைப்பில் பேசுகையில் உலகம் உள்ளங்கைக்குள் அடங்கிவிடுகிறது. ஆண்டிப்பட்டியில் அதே நேரத்தில் இணையவழிக் காணொலி மூலம் காண முடிகிறது.

i) கடிதம் போக்குவரத்து எதன் வரவால் குறைந்தது?

ii) எதன் வருகையால் தந்தி விடைபெற்றுக் கொண்டது?

iii). உலகம் உள்ளங்கைக்குள் எதன் வருகையால் அடங்கிவிடுகிறது?

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. **2x3=6**

(34 –ஆவது வினாவிற்க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்).

32. புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.
33. 'என் சமகாலத் தோழர்கள்' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?
34. அடிப்பிறழாமல் எழுதுக.

"நீர் இன்று" எனத் தொடங்கும் தொல்காப்பியப் பாடல் (அல்லது)

"அறிவியல் என்னும்" எனத் தொடங்கும் ஓ, என் சமகாலத் தோழர்களே! பாடல்.

பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. **2x3=6**

35. தனிவினை, கூட்டுவினைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
36. வல்லினம் மிகா இடங்கள் ஐந்தினை எழுதுக.
37. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை - இக்குறளில் பயின்றுவரும் அணியை எழுதுக.

பகுதி – IV (மதிப்பெண்கள் 25)

பிரிவு - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. **5x5=25**

38. தூது அனுப்பத் தமிழே சிறந்தது – தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)


பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

39. உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

(அல்லது)

பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக

40. மின்சார சேமிப்பு பற்றிய விழிப்புணர்வு முழக்கத் தொடர்களை எழுதுக.
41. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



42. என் பொறுப்புகள் என்ற தலைப்பில் உனக்குத் தெரிந்த ஐந்து பொறுப்புகளை எழுதுக.

(அல்லது)

மொழிபெயர்க்க.

A nation's culture resides in the hearts and in the soul of its people – Mahatma Gandhi

schools.aglasem.com
aglasem.com

KSJ சுடரொளி தமிழ் உரை, நாமக்கல்.

மாணவர்களுக்கான ஒரு சிறந்த வழிகாட்டி

The art of people is a true mirror to their minds – Jawaharlal Nehru
The biggest problem is the lack of love and charity – Mother Teresa
You have to dream before your dreams can come true – A.P.J.Abdul Kalam
Winners don't do different things; they do things differently – Shiv Khera

பகுதி – V (மதிப்பெண்கள் 24)

பிரிவு - I

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க. **3x8=24**

43. அ. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(அல்லது)

ஆ. ஏறுதழுவுதல் தமிழரின் அறச் செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரி.

44. அ. பண்பாட்டுக் கூறுகளைப் பேணிக்காக்க நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ. நயம் பாராட்டுக

விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்
விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில், நல்வயலில், விலங்கில், புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,
அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே!

- ம.இலெ.தங்கப்பா

45. அ. குறிப்புகளைப் பயன்படுத்தி ஒரு கட்டுரை எழுதி தலைப்பிடுக.
குறிப்புகள் : முன்னுரை – தென்னவர் வளர்த்த தமிழ் – சிற்றிலக்கியங்களின் சிறப்பு – தமிழ் வளர்த்த சான்றோர்கள் – தமிழ் மொழியின் தொன்மை – முடிவுரை.

(அல்லது)

ஆ. குறிப்புகள் : முன்னுரை – இலக்கியங்களில் ஏறு தழுவுதல் – தொல்சான்றுகள் – பண்பாட்டு அடையாளம் – ஏறு தழுவுதலும் தமிழர் அறமும் – நம்கடமை – முடிவுரை.

schools.aglasem.com
AglaSem Earn while Learn Program. Send your papers and get paid.
Contact: support@aglasem.com
aglasem.com